# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

**அசல் வழக்கு எண். 56–2022**

**நாள்:** 01.04.2026

**பெயர் : ராஜேந்திரன்**

**DW: 1**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1ம் பிரதிவாதி ராமாயி எனது தாயார். 2ம் பிரதிவாதி சாந்தகுமாரி எனது சகோதரி. அவர்கள் இருவர் சார்பாக நான் சாட்சியம் அளிக்கிறேன். 2ம் பிரதிவாதி மகளை நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் வாதியின் கணவர் 2ம் வாதியின் தந்தை மனோகர் எனது மூத்த சகோதரர். 2ம் பிரதிவாதி தான் எங்களுக்கு வயது மூத்தவர் என்றால் சரிதான். எனது தகப்பனார் முனியாண்டி பிள்ளை கடந்த 2000ம் ஆண்டு இறந்துபோனார் இறக்கும்போது அவரது வயது 73. வயது தகப்பனாருக்கும் தாயாருக்கும் எவ்வளவு வயது வித்தியாசம் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. எனது தாயாருக்கு தற்போது வயது 86 என்றால் தெரியவில்லை 90 வயது கூட இருக்கும். என் தாயாருக்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்று தெரியாது. எந்த வயதில் திருமணம் நடந்தது என்று தெரியாது. எனது சகோதரி சாந்தகுமாரிக்கு தற்போது 72 வயது இருக்குமா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. எனக்கும் 2ம் பிரதிவாதி எனது சகோதரிக்கும் 8 வயது வித்தியாசம் இருக்கும். எனக்கு தற்போது வயது 62 முடிந்துவிட்டது. வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையில் உள்ள விபரங்கள் நான் தான் சொன்னேன் அது சரிதான். எனது தாயார் வீட்டு குடித்தனம் தான் செய்து வருகிறார். எனது தகப்பனார் நாகப்பட்டினம் ADJ ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனத்தில் கணக்கு பிள்ளையாக இருந்தார் என்றால் சரிதான். எனது தாயாரின் சொந்த ஊர் நாகப்பட்டினம் தான். எனது தாயாரின் தந்தை பெயர் முனியாண்டி தான். அவர் ADJ நிறுவனத்தில் கூலி வேலை பார்த்து வந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர் எந்த வருடம் இறந்துபோனார் என்று எனக்கு தெரியாது. என்னை பொறுத்தவரையில் வாதிகளுக்கு தாவா 1 முதல் 5 அயிட்டம் சொத்துக்களில் வாதிகளுக்கு 1/ 4 பாகம் உள்ளது என்றால் சரிதான்.

6வது அயிட்டம் சொத்தை பொறுத்து தான் வாதிகளுக்கு பாகம் இல்லை என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான். ஏன் வாதிகளுக்கு 6வது அயிட்டம் சொத்தில் பாகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் அந்த சொத்தினை எனது தாயாருக்கு அவரது தகப்பனார் வாங்கிகொடுத்ததாக என்னிடம் சொல்லியுள்ளார் அதனால் வாதிகளுக்கு 6வது அயிட்டம் சொத்தில் பாகம் இல்லை என்று சொல்கிறேன். தாவா 6வது அயிட்டம் சொத்தானது பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் எனது தாயார் பெயரில் கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த கிரய ஆவணத்தை பார்த்தால் எந்த மூலத்தனத்தை கொண்டு மேற்படி சொத்து வாங்கப்பட்டது தெரியவரும் என்று சொன்னால் தெரியவராது. அந்த அசல் கிரய ஆவணம் எனது தாயாரிடம் தான் உள்ளது. எனது தாயாரும் உள்ளூரில் தான் இருந்து வருகிறார். எனது தாயாரை விசாரித்தால் சொத்து எப்படி வாங்கப்பட்டது என்ற விபரம் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். நான் எனது தாயார் பெயரில் உள்ள 1963 கிரய ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் எனது தாயார் எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்திலும் எனது தாயாருக்கு அவரது தந்தை கொடுத்த மூலத்தனத்தை கொண்டு செட்டில்மெண்ட் கிடைக்கப்பட்டதாக எவ்வித குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது தாயாருக்கு திருமணம் ஆகி சுமார் 26 ஆண்டுகள் கழித்து தான் தாவா 6 வது அயிட்டம் சொத்து எனது தாயார் பெயரில் கிரயம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தாயாரின் தந்தை எந்த வருடம் இறந்துபோனார் என்றும் எனக்கு தெரியாது. இந்த விபரங்கள் எல்லாம் தங்களுக்கு நன்கு தெரியும் என்றும், தாவா 6 வது அயிட்டம் சொத்தானது எனது தந்தை முனியாண்டி பிள்ளையால் எனது தாயார் பெயரில் கிரயம் பெறப்பட்டது என்பதால் அவ்வாறு தெரியாது என்று சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. அதன் காரணமாக தான் 1963 மூல ஆவணத்தையும் தாக்கல் செய்யாமல் இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயாரின் தந்தை கூலி வேலை பார்த்து வந்தார் என்றும் என் தாயாருக்கு திருமணம் ஆகி 26 ஆண்டுகள்

கழித்து சொத்து வாங்கிகொடுக்க வேண்டிய நிர்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் தாவா 6வது அயிட்டம் சொத்தினை கிரயம் பெற்ற 1963ம் ஆண்டு அவரது தந்தை உயிருடன் இல்லை என்று சொன்னால் சரிதான் அதனால் அவர் எனது தாயாருக்கு சொத்தை கிரயம் வாங்க மூலத்தனம் கொடுக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தாயாரின் தந்தை பெயர் கட்டாரியாப்பிள்ளை என்றும் முனியாண்டிபிள்ளை என்ற பெயர் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. கட்டாரியாப்பிள்ளை என்பது அழைப்பு பெயர் ஆகும். தாவா 1வது அயிட்டம் சொத்தானது நாகப்பட்டினம் கல்லுக்கார தெருவில் உள்ள 10 காலனி ஓட்டு வீடுகள் அடங்கிய சொத்து என்றால் சரிதான். அந்த காலனி வீடுகள் எனது தகப்பனார் காலத்தில் இருந்து வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் காலமான பின்பு அந்த வாடகை வீட்டிற்கான வாடகையை நான் தான் வசூல் செய்து வருகிறேன். சாட்சி தற்போது எனது சகோதரர் வாடகை வசூல் செய்வதாக சொல்கிறார். எனது சகோதரர் மனோகர் 2005ல் காலமாகிவிட்டார். அதன் பின்பு யார் வாடகை வசூல் செய்தார் என்றால் வீடுகள் அனைத்தும் சேதமாகிவிட்டன அதனால் வாடகைக்கு விட முடியவில்லை. 2005ல் இருந்து வாடகை வசூல் செய்யவில்லை. நான் எனது எதிர்வழக்குரையில் செலவு கணக்கினை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் செலவுகளை கல்லுக்கார தெருவில் உள்ள காலனி வீடுகளை ரிப்பேர் பார்த்த விபரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2007க்கு பின்பு நான் மேற்படி பழுதான காலனி வீடுகளை ரிப்பேர் செய்தேன். எனது சகோதரி குடியிருந்ததால் நான் பழுது பார்த்தேன். தாவா 4வது அயிட்டம் சொத்தானது நாகப்பட்டினம் அருள்மிகு நீலாயதாட்சியம்மன் கோவிலுக்கு சொந்தமான மனை என்றால் சரிதான். தாவா 4வது அயிட்டம் சொத்து நாகப்பட்டினம் நகரத்தில் பிரதான சாலையில் உள்ள சொத்து என்றால் சரிதான். தாவா 4வது அயிட்டம் சொத்தில் குடியிருப்பு வீடு மற்றும் வணிக கடை உள்ளது என்றால் சரிதான். அதில் ஏற்கனவே எனது தகப்பனார் காலத்தில் விறகுவாடி இருந்தது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு ஆயில் ஸ்டோர் இருந்ததா இல்லையா என்றால் ஆயில் ஸ்டோர் இல்லை. அந்த கடை சும்மா தான் இருந்தது. எனது முதல்

விசாரணையில் தாவா 4வது அயிட்டம் சொத்தில் கடை இல்லை என குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் செலவினங்கள் பட்டியலில் தாவா 4வது அயிட்டம் சொத்தில் கடை கட்டியதற்காக ரூபாய் 3,50,000 செலவு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த கடைக்கு இரும்பு கதவுகள் மற்றும் இரும்பு படிக்கட்டுகள் அமைத்ததற்காக செலவு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா 4வது அயிட்டம் சொத்தில் கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் இல்லை சொந்தமாக தொழில் செய்வதற்காக கட்டப்பட்டது. தாவா 4வது அயிட்டம் சொத்தில் இருந்த கடைகளை வாடகைக்கு விட்டு அதில் இருந்து வருமானம் பெற்றுவந்தேன் என்று சொன்னாலும் அதை மறைப்பதற்காக தான் அதில் கடைகள் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா 5வது அயிட்டம் சொத்தானது ராமநாதபுரம் மாவட்டம் உத்தரகோசமங்கையில் உள்ள 3 குடியிருப்பு வீடுகள் என்றால் சரிதான். அந்த 3 குடியிருப்பு வீடுகளும் வாடகைக்கு விடப்பட்டு வாடகை வசூல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 2வது அயிட்டம் சொத்துக்கள் நஞ்சை விவசாய நிலங்கள் என்று சொன்னால் சரிதான். அதனை யார் சாகுபடி செய்தார் என்றால் அது என் தகப்பனார் காலத்தில் இருந்து தரிசாக தான் இருக்கிறது. தாவா 2வது அயிட்டம் சொத்திற்கான சிட்டா அடங்கல் நகலினை நடப்பு பசலை ஆண்டிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தகப்பனார் காலமான பின்பு வழங்கப்பட்ட சிட்டா அடங்கலை பார்வையிட்டால் தான் அதில் விவசாயம் செய்யப்பட்டதா அல்லது தரிசாக கிடந்தது என்று சொல்லமுடியும் என்றால் சரிதான். அந்த விவசாய நிலங்களின் மகசூலை நான் தான் அடைந்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்களில் செய்யப்பட்ட செலவு கணக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதன் வருமான கணக்கு விபரங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ள செலவினங்கள் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்ட பொய் கணக்குகள் என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் வசம் சுமார் 50 பவுன் நகைகள் என் தகப்பனாரால் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1ம்

வாதிக்கு திருமணத்தின் போது அணிவிக்கப்பட்ட 25 பவுன் நகைகள் என்வசம் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கும் வாதிகளுக்கும் உள்ள சொத்து பிரச்சனை தொடர்பாக முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பலமுறை சமரசம் பேசியுள்ளோம் என்றால் சரிதான். அவ்வாறு சமரசம் பேசும்போது எழுத்து மூலமாக செலவு கணக்குகளை எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் வாதிகளிடம் தனிப்பட்ட முறையில் கொடுத்துதான் தவிர முக்கியஸ்தர்கள் முன்னிலையில் கொடுக்கவில்லை. என்னால் கொடுக்கப்பட்ட செலவு கணக்கு விபரத்தில் நகை கடன் வட்டி செலுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த நகை கடன் எல்லாம் எனக்கு சொந்தமான நகை தான். அந்த நகைகளை 2ம் வாதி படிப்பிற்காக அடகு வைக்கப்பட்டது. 2ம் வாதியின் படிப்பிற்காக எனது நகைகளை அடகு வைத்ததாக எனது எதிர்வழக்குரையில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 2ம் வாதி தனது படிப்பிற்காக 2004லிருந்து சுமார் 4 வருடங்கள் எனது நகைகளை அடைமானம் வைத்துள்ளேன். எனது செலவு பட்டியலில் 2015, 2016, 2017 ஆண்டுகளில் நகை கடன் பெற்றுள்ளதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். 2ம் வாதியின் படிப்பிற்காக நான் எனது நகைகளை அடைமானம் வைக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னால் அடைமானம் வைத்ததாக சொல்லப்படும் நகைகள் எனது சொந்த பயன்பாட்டிற்காக எனது தகப்பனாருக்கு சொந்தமான 50 பவுன் நகைகள் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எவ்வளவு பவுன் நகைகள் என் தாயார் வசம் உள்ளது என்றால் 2 பவுன் உள்ளது. என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் 2ம் வாதி திருமணத்திற்கும் படிப்பிற்கும் எவ்வித செலவும் செய்யவில்லை என்று சொன்னால சரியல்ல. விளை நிலங்களை அழைப்பை ஏற்று திருப்புவோம் என்று சொன்னால் சரிதான். அதுபோன்று முனியாண்டிபிள்ளைக்கு சொந்தமாக தர்மன் பங்கு, வீரைய்யன் பங்கு, குப்பம்மாள் பங்கு, குணசுந்தரி பங்கு, பச்சமுத்தம்மாள் பங்கு, வேலுசாமி பிள்ளை பங்கு, ஆறுமுகம் பங்கு மற்றும் ECR நிலம் ஆகியவை உள்ளது என்றால் சரிதான். அவைகள் தாவா 2, 3 அயிட்டம் சொத்துக்கள் ஆகும். தாவா சொத்துக்கள் நீங்கலாக முனியாண்டிபிள்ளைக்கு சொந்தமான விடுப்பட்ட சொத்துக்களிலும்

வாதிகளுக்கு 1/ 4 பாகம் உள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் என்றால் சரிதான். ECR ரோட்டில் உள்ள முனியாண்டிபிள்ளைக்கு சொந்தமான நிலங்கள் அரசினால் 2முறை நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. இரண்டுமுறையும் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்காக இழப்பீடு தொகை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கு நிலத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்னவென்றால் தற்போது ஞாபகம் இல்லை. முதலில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கு சுமார் 12, 13 ஆண்டுகளுக்கு முன்பு ரூபாய் 32,000 கொடுத்தார்கள். அதற்கான காசோலை என் பெயரில் தான் வழங்கினார்கள். இரண்டாவது முறை நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கு நிலத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை பார்த்து தான் சொல்லமுடியும். அதற்கு இழப்பீடாக ரூபாய் 2,50,000 வழங்கினார்கள் அதுவும் என் பெயரில் தான் காசோலை வழங்கினார்கள். அதன் மீது இழப்பீடு தொகை குறைவாக உள்ளதாக கூறி நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் வழக்கு எண் ஞாபகம் இல்லை. அவ்வாறு நீதிமன்றத்தில் உத்தரவின்பேரில் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டு ரூபாய் 46,00,000 வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த தொகையினை நான் வாங்கிகொண்டேன் என்றால் சரிதான். நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் இழப்பீடு கோரி மத்தியஸ்த வழக்கு தாக்கல் செய்ததில் இவ்வழக்கின் வாதிகளை நான் தரப்பினர்களாக சேர்த்தேனா என்றால் இல்லை. மேற்படி மத்தியஸ்த வழக்கு சுமார் 3 மாதங்களுக்கு முன்பு முடிவுற்றது. வாதிகளுக்கு தெரியாமலேயே வாதிகளை ஏமாற்றி அவர்களது வாரிசுரிமையை மறைத்து மேற்படி தொகையை பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு வழங்கப்பட்ட இழப்பீடு தொகையை வாதிகளுக்கு 1/ 4 பாகம் உள்ளது என்றால் சரிதான். அந்த தொகையினையும், உத்தரவினையும் கொடுப்பதற்கும் நான் தயாராக உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு வழங்கப்பட்ட

தொகையினை எனது வங்கி கணக்கில் வங்கி பணபரிமாற்றமாக டெபாசிட் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாதிகளுக்கு மேற்படி தொகையில் 1/ 4 பாகத்தினை அடுத்த வாய்தா தேதியில் செலுத்த தயாராக உள்ளேன்.